ஞாயிறு | செப்டெம்பர் 1 | 📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:12

# நல்மனச்சாட்சியும் விசுவாசமும்

ஒரு மனிதனானவன் ஆழ் சமுத்திரத்திலே தாபரிக்கும் ஊரை நோக்கி தன் சொந்தக் கப்பலிலே பயணித்துக் கொண்டிருந்தான். சமுத்திரத்தின் இரைச்சல், கார் மேகங்கள் சூழ்ந்து, இடி முழக்கங்கள், பெரும் புயல் காற்றுக்களையும், வலிய தண்ணீரிலே ஏற்படும் பயங்கரங்களையும் எதிர்நோக்கி செல்லும் அந்த மனிதனானவன், தானே தன் கப்பலை சேதப்படுத்திக் கொள்பவனாக இருந்தால், அவனை மதியீனன் என்று மற்றய மனிதர்கள் கூறுவார்கள் அல்லவா? அப்பபடிப்பட்ட மனிதர்கள் தங்கள் துணிகரமான செயல்களால், தங்கள் சுத்தமனசாட்சியை உணர்வற்றுப் போகப் பண்ணுகின்றார்கள். அவர்கள் மனம் இருளடைந்து போவதால், அவர்கள் செய்வது இன்தென்று அறியாதவர்களாய் ஆழ் கடலிலே சொந்தக் கப்பலையே உடைத்துப் போடும் மனிதனுக்கு ஒப்பாக இருக்கின்றார்கள். தங்கள் அருமையான வாழ்க்கையை தாங்கே கெடுத்துக் கொள்கின்றார்கள். ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, பரம யாத்திரிகளாக இந்த உலகத்தை கடந்து கொண்டிருக்கும் நம் வாழ்விலே, "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு". நாம் நல்ல போராட்டத்தை போராடும்படிக்கும், நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படிக்கும், தேவன் நடக்கு கொடுத்த நல்ம னச்சாட்சியை நாம் காத்துக் கொள்ள வேண்டும். வாழ்விலே தவறுகள் ஏற்படுவதுண்டு ஆனால், ஒரு விசுவாசியானவன், திரும்பத் திரும்ப தன் மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களை செய்ய துணிகரம் கொள்ளும்போது, அந்த மனசாட்சியானது சூடுண்டு போய்விடுகின்றது. அதன் பின்பு வாழ்க்கையில் தவறும் போது, தவறுகள் தவறாக தெரியாத படிக்கும், பாவங்கள் இனி பாவங்களாக தோன்றாத படிக்கும், அவர்களது மனசாட்சியானது கடினப்பட்டு போய் விடுகின்றது. சிலர் இந்த நல்மனச்சாட்சியைச் அற்பமாக எண்ணி, அதைத் தள்ளிவிட்டுகின்றதினாலே, விசுவாசத்தின் நல்ல போராட்ட த்தை போராட முடியாமல், தங்கள் விசுவாசமாகிய கப்பலைச் தாங் களே சேதப்படுத்திக் கொள்கி ன்றார்கள். எனவே நீங்கள் அப்படியான உணர்வற்ற மதியீனமான நிலைக்கு தள்ளப்பட்டுப் போய்விடாதபடிக்கு, விசுவாசமும் நல்மன ச்சாட்சியும் உடை யாவர்களாயிருங்கள்.

**1 தீமோத்தேயு 1:18**

**நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.**

**ஜெபம்**: சுத்தமனச்சாட்சியை எனக்கு தந்த தேவனே, நீர் என்னோடு தயவாய் பேசும் போது, விமர்சனங்களுக்கு இடங்கொடாமல், உம்முடைய ஆலோசனைகளை கேட்டு அதன்படி வாழ என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வழுவாதடி உறுதியாய் இருங்கள்

**1 தீமோத்தேயு 6:12**

விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்;

இன்றைய நாட்களிலே விசுவாச மார்க்கத்தார் மத்தியிலே, பணத்தைக் குறித்த உபதேசமானது பெரும் விவாதங்களுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருக்கின்றது. நாம் கடந்த நாட்களிலே தியானித்த பிரகாரம், சில விசுவாச மார்க்கத்தார், உலக ஐசுவரியத்தின் பெருக்கம் யாவும் தேவ ஆசீர்வாதம் என்றும், ஐசுவரியம் பெருகும் போது, ஐசுவரியத்தை இன்னும் பெருக்க பல வழிகளை உண்டு பண்கிக் கொண்டு, தேவனை அறியாத உலக ஐசுவரியவான்களைப் போல வாழ்ந்து கொண்டு, தங்களுக்கு பண ஆசை இல்லை என்று கூறிக் கொள்கின்றார்கள். நாம் அவர்களுடைய நியாயாதிபதிகள் அல்ல. ஆனால், ஐசுவரியத்தை பெருக்கிக் கொண்டு, தங்களை விசுவாச மார்க்கத்தார் என்று கூறிக் கொள்கின்றவர்கள், தங்கள் வாழ்க்கையை ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்ப்பது அவர்களுக்கு நன்மையை உண்டாகும். ஆனால், நீங்களோ, எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கின்றது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியான வேதனைகளின் மத்தியிலே வாழ்ந்து கொண்டு, தாங்கள் சமாதானமாக வாழ்கின்றோம் என்று கூறிக் கொள்கின்றார்கள். நாம் போகும் வழியிலே உலக ஆசை இச்சைகளினாலே உண்டாகும் வேதனைகள் அநேகம் உண்டு என்ற அறிந்தால், அந்த வேதனைகளை உண்டாக்கும் வழிகளைவிட்டு நாம் சீக்கிரமாக விலக்கிக் கொள்ள வேண்டும். பணஆசை உங்களில் இருக்கின்றதா என்று நீங்களே உங்களை ஆராய்ந்து பாருங்கள். அதைக் குறித்து இந்நாட்களிலே அதிகமாக தியானம் செய்வோம். “நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.” வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவராகிய ஆண்டவராகிய இயேசு காட்டிய வழியிலே நடவுங்கள். அழியாத மேலான பொக்கிஷத்தை நாடித் தேடுங்கள். அதையே மேன்மையாக எண்ணுங்கள். சத்திய ஆவியானவர் உங்களை வழிநடத்திச் செல்வாராக.

**ஜெபம்**: இதுவரையும் என் கால்கள் வழுவாமல் காத்து வந்த தேவனே, செழிப்பின் உபதேசங்களால் நாம் இழுப்புண்டு போகாதபடிக்கு, விசுவாசத்திலே நிலைத்திருக்கும் இருயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்விலே முக்கியமானவைகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தற்போதிருக்கும் வாடகை வீட்டிலிருந்து வேறொரு வாடகை வீட்டிற்கு இடம்பெயர வேண்டியிருந்ததால், உதவிக்காக தன் நண்பர்கள் சிலரை, முன்குறித்த நாளொன்றிலே வரும்படியாக அழைத்திருந்தான். முதலாவது நண்பன் அவனை நோக்கி: நண்பா, அந்த நாளிலே, எனக்கு வகுப்பு உண்டு அதனால், உதவிசெய்ய மு டியாது என்றான். இரண்டாவது நண்பன்: நான் உதைபந்தாட்டப் போட்டியை பார்க்கும்படி அனுமதிசீட்டை வாங்கி விட்டேன், அதனால் என க்கு வரமுடியாததையிட்டு மனம் வருந்துகின்றேன் என்றான். மூன் றாவது நண்பன்: நான் திரைப் படம் பார்க்க செல்கின்றேன் எனவே வர முடியாது என்றான். நண்பர்க ளில் வேறு இருவர்: குடித்து வெறித்திருந்ததால் அந்நாளிலே அங்கு செல்லாதிருந்தார்கள். அந்த வாலிபனானவன் இடம்பெயர்ந்த அடுத்த நாளிலே, அவனுக்கு உதவி செய்ய போகாத நண்பர்கள், தங்கள் தங்கள் காரணங்களே தகுந்ததும் ஏற்புடையது என்று தங்களுக்குள் விவாதம் செய்து கொண்டார்கள். ஒருவேளை சிலருடைய காரணங்கள் தகுந்ததாவும், வேறு சிலருடைய காரணங்கள் தகுந்ததல்லாததுமாக இருக்கலாம். காரணங்கள் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நண்பனுக்கு உதவி செய்ய செல்வதே இலக்காக இருந்தால், அவர்கள் யாவரும் தகுந்த காரணத்திற்காகவோ, தகுந்தல்லாத காரணத்திற்காகவோ இல க்கை அடையத் தவறி விட்டார்கள். இன்று பற்பல காரணங்களுக்காக மனிதர்கள் சபை கூடிவருதலை தவிர்த்துக் கொள்கின்றார்கள். இவர்க ளுடன் சில விசுவாச மார்க்கத்தாரும் இணைந்து கொண்டு, பலவிதமான காரணங்களையும், சாட்டுப் போக்குகளையும் சொல்லிக் தங்கள் கிரியைகளை நியாயப்படுத்திக் கொள்கின்றார்கள். ஒரு விசுவாசியா னவன், தன் வாழ்விலே எதை முக்கியப்படுத்திக் கொள்கின்றானோ, அதுவே அவனுடைய இலக்காக மாறிவிடுகின்றது. அதனால் நாளா டைவிலே அவர்கள் தங்கள் வாழ்விலே முக்கியம் என்று நியமித்த காரி யமானது, உலக பார்வைக்கு நன்மையானதாக தோன்றினாலும், அவர் கள் வாழ்க் கையை அது ஆளுகை செய்ய ஆரம்பித்து விடுகின்றது. பிரியமான வர்களே, உங்கள் வாழ்வின் முக்கியத்துவமானது என்ன? யார் அல்லது எது உங்கள் இருதயங்களை ஆளுகை செய்கின்றது? தேவனுக்கு முன்ன எதை சாட்டுப் போக்காக கூறிக் கொள்வீர்கள்?

**2 பேதுரு 2:19**

**எதினால் ஒருவன் ஜெயிக்கப் பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கி றானே.**

**ஜெபம்:** மேலானவைகளை தேடும்படி என்னை வேறு பிரித்த தேவனே, நான் முதலாவது தேவ ராஜ்யத்தையும் அதன் நீதியையும் ஆவலோடு தேடும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை எனக்குத் தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | செப்டெம்பர் 4 | 📖மாலை வாசகம் – மத்தேயு 22:1–14

# வாழ்வின் மேன்மையான நோக்கம்

தேசத்தை ஆளும் ராஜாவானவர், உங்களை ராஜ்யத்தின் அதி விசேஷித்த விருந்தொன்றுக்கு அழைத்தால், உங்கள் பதில் என்னவாக இருக்கும்? ஆண்டவராகிய இயேசு இதைக் குறித்து கூறியதை இன்று தியானம் செய்வோம். "ஒரு மனுஷன் பெரியவிருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி: நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள், என்று சொல்லென்று அவனை அனுப்பினான்.அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: ஒரு வயலைக்கொண்டேன், நான் அகத்தியமாய்ப் போய், அதைப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: ஐந்தேர்மாடு கொண்டேன், அதைச் சோதித்துப்பார்க்கப் போகிறேன், என்னை மன்னிக்கும் படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினால் நான் வரக்கூடாது என்றான். அந்த ஊழியக்காரன் வந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறிவித்தான் அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா என்றான். அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனாகிலும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான்" என்று சொன்னார். நித்திய ராஜ்யத்திற்கென்று அழைப்பப்பட்டவர்களே, ஆண்டவராகிய இயேசு குறிப்பிட்ட மூன்று விருந்தாளிகள் இந்த உலகிலே வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களைக் சுட்டிக் காட்டியே போக்குச் சொல்ல ஆரம்பித்தார்கள். பரலோகத்தின் பெரிய விருந்துக்கு அழைக்கப்பட்டி ருக்கும் உங்களுடைய மனநிலையைக் குறித்து நீங்களே ஆராய்ந்து அறிய முடியும். தேவனுடைய அழைப்பை உங்கள் வாழ்விலே கனம் பண்ணுங்கள். உலக தேவைகளுக்காக தேவ காரியங்களை மாற்றியமைக்க முயற்சி செய்யாமல், உலக காரியங்களை தேவ சித்தப்படி நிறைவேற்றுங்கள். வாழ்வின் மேன்மையான இலக்கை இழந்து போய்விடாதிருங்கள். தேவ ஆட்டுக்குட்டியாவரின் விருந்து அழைக்கப்பட்டவர்கள் பாக்கிவான்கள்.

**வெளிப்படுத்தல் 19:9**

**ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான்.**

**ஜெபம்:** மேலானவைகளை நாடும்படிக்கு என்னை அழைத்த தேவனே, இந்த உலக தில் அவசியமானவைகள் என்று தோன்றும் காரியங்களால் என் இருத யம் உணர்வற்றுப் போய்விடாதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெரிய குற்றம் எது?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனாவனொருவன், வாலிப நாட்களிலிருந்தே புகைப்பிடிக்கும் பழக்கமுடையவனாக இருந்து வந்தான். ஆண்டுகள் கடந்து செல்லும் போது, அந்தப் பழக்கத்திற்கு அவன் அடிமையாகிவிட்டான். அவன் வீட்டிலிருந்தாலும், வேலையிலிருந்தாலும், திருவிழாக்களுக்கு சமுகமளித்தாலும், குறித்த நேரங்களிலே அவன் எதைக் குறித்தும் பொருட்படுத்தாமல், வெளியே சென்று புகைத்துக் கொள்வான். பணம் விரயமாவதையும், தன்னோடு ஒரே வீட்டிற்குள் வாழும் மனைவி, பிள்ளைகளின் சுகாதாரம், சுகம், சேமநலம் எதையும் குறித்து அவன் உணர முடியாத நிலைக்கு அவன் தன்னையே தான் அடிமையாக்கிக் கொண்டான். பொதுவாக, புகைப்பிடித்தல், மதுபான வெறி கொள்ளுதல், போதைவஸ்து அடிமைத்தனங்கள் மனிதனுடைய வாழ் க்கையை பாழாக்கிப்போடும் என்பதைக் குறித்து மனிதர்கள் பேசிக் கொள்வார்கள். ஆனால், ஒருவன், தன் கல்வி, வேலை, விளையாட்டு, பொழுபோக்கு போன்றவற்றிற்கு தன்னை அடிமையாக்கிக் கொண்டு, தன் குடும்பத்தின் தேவைகளை உணர முடியாமல் போகும் போது அவனும் தன்னை அவைகளுக்கு அடிமையாக்கிக் கொள்கின்றான். எனவே, இந்த உலகத்திலே மனிதர்களுக்கு நன்மையாக தோன்றும் காரியங்களும் குடும்பத்தின் நிம்மதியை குலைத்து, வாழ்வின் முக்கிய இலக்கை அடையமுடியாதபடிக்கு தடையாக மாறிவிடும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்நாட்களிலே, விசுவாச மார்க்கத்தாரும், பிள்ளைகள் படிக்க வேண்டும், கைநிறைய உழைக்க வேண்டும் என்று தங்கள் பிள்ளைகளின் கல்விக்கு வேண்டிய யாவற்றையும் அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கின்றார்கள். சில வேளைகளிலே, தேவனை தேடுவதைவிட, கல்வி, வேலை, பொழுது போக்குகளை பிள்ளைகளின் வாழ்க்கையிலே முதன்மைப்படுத்துகின்றார்கள். எப்படி? ஞாயிறு ஆராதனையை தவறவிட்டாலும், கணித பாடத்தின் வகுப்புகளை தவறவிடக்கூடாது. அனுதினதும் வேதத்தை வாசித்து, ஜெபம் செய்யாவிட்டாலும், பாடசாலையிலே கொடுக்கும் வீட்டுப் வேலைகளை செய்து முடிக்க வேண்டும். வேதத்தை அறியாவிட்டாலும், படிக்கும் பாடங்களிலே அதிக புள்ளிகளை எடுக்க வேண்டும் என்ற மனநிலையுடையவர்களாக மாறிவிடுகின்றார்கள். தேவனுடைய ராஜ்யத்தையே முதன்மைப் படுத்திக் கொள்ளுங்கள். அப்பொழுது தேவ ராஜ்யத்தின் சமாதானம் உங்கள் குடும்பத்தில் நிலைத்திருக்கும்.

**லூக்கா 12:31**

**தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்**

**ஜெபம்:** அன்பின் பரம தகப்பனே, இந்த உலகத்தின் நன்மைகளிலே அகப்பட்டு நான் மாயைக்குள் சிக்கிவிடாதபடிக்கு, பரலோக மேன்மையையே நான் நாடித் தேடும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனதின் உண்மையான வாஞ்சைகள்

ஒரு பெற்றோரானவர்கள், மாலை வேளைகளிலே, தங்கள் மகனான வனை, சின்ன வயதிலிருந்தே வீட்டின் அருகிலுள்ள பூங்காவிற்கு அழை த்து சென்று அங்கே அவ்வப்போது நேரத்தை கழித்து வந்தார்கள். பூங்காவை விட்டு வெளியேறும் போது, தாங்கள் இருந்த இடத்தையம் சுத்தப்படுத்தி, மிகுதியாக இருக்கும் சிற்றுண்டி துணிகளைகளையும், குளிர்பான போத்தல்களையும், எடுத்தச்சென்று குப்பைத்தொட்டியிலே தவறாமல் போட்டு விடுவது அவர்களுடையவழக்கமாகஇருந்தது. சில ஆண்டுகள் கடந்து சென்ற பின்பு, ஒருநாள், மாலை வேளையிலே அவர்கள், சீக்கரமாக பூங்கவைவிட்டு செல்ல வேண்டியிருந்ததால், துரிதாமாக அவர்கள் இருந்த இடத்தை சுத்தப்படுத்திய பின்பு, தகப்பனானவர் தன் மகனின் கையைப் பிடித்துக் கொண்டு அவ் விடத்தைவிட்டு போகும் போது, அங்கே சில உணவுப் பைகள், கீழே விழுந்து கிடந்ததை கண்ட மகனானவன், தகப்பனானவரின் கையை உதறிவிட்டு, ஓடிச் சென்று, அந்தப் பைகளை எடுத்து, குப்பத் தொட்டியிலே போட்டுவிட்டு, மறுபடியும் தகப்பனானவரின் கையை பிடித்துக் கொண்டான். பெற்றோர் தங்கள் வாழ்வில் எதை இயல்பாகவே முதன் மைப்படுத்திக் கொள்கின்றார்களோ, அதை பிள்ளைகளும் இயல்பா கவே முதன்மைப்படுத்திக் கொள்கின்றார்கள். முதலாவது தேவனு டைய ராஜ்யத்தையும் நீதியையும் மனதார உண்மையாக தேடும் பெற்றோர், அதன் மேன்மையை அறிந்திருப்பதினால், பிள்ளைகளும் அந்த மேன் மையை அடைய வேண்டும் என்று தங்கள் கிரியைகள் வழியாக பிள் ளைளுக்கு கற்றுக் கொடுப்பார்கள். சில பெற்றோர், வெளிவேடமாக ஆலயத்திற்கு சென்று கொண்டு, தங்கள் வாழ்வில் கல்வியையையும், வேலையையும் முதன்மைப் படுத்தி வந்தால், பொதுவாக பிள்ளைக ளும் வளர்ந்து தங்கள் பெற்றோர் தங்களுக்க கற்றுக் கொடுத்ததையே பின்பற்றுவார்கள். எனவே, பெற்றோர், உண்மையாக எதை தங்கள் வாழ்வில் மேன்மைப் படுத்துகின்றார்கள் என்றும், பிள்ளைகளின் வளர்ச் சியில் எதை குறித்து உண்மையான மகிழ்சியும் பெருமையடையகி ன்றார்கள் என்பதையும் குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். மனுஷன் எதை விதைக்கின்றானோ, அதையே அறுப்பான் என் கின்ற உண்மையை மறந்து போய்விடக் கூடாது. எனவே, உண்மை யயுள்ள இருதயத்தோடு, தேவனாகிய கர்த்தர் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையும் கைக்கொள்ளுங்கள். அப்போது பிள்ளைகளும் உங்களை பின்பற்றி வருவார்கள்.

**உபாகமம் 4:40**

நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் நன்றா யிருக்கும்படிக்கும்

**ஜெபம்**: என் உள்ளந்தரியங்களை அறிந்த தேவனே, நான் முதலாவதாக உம்முடைய ராஜ்யத்தையும் நீதியையும் உண்மையாக தேடும்படிக்கு உணர்வுள்ள இருயத்தைத் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# போதகத்தை ஏற்றுக் கொள்ளாத மனம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த போதகரொருவர், அந்த ஊரிலே, கர்த்தரை அறிந்தும், ஊதாரித்தனமாக வாழ்ந்து வரும் ஒரு மனிதனொருவனை சந்தித்து, அவனை நோக்கி: மகனே, நீ ஆண்டவர் இயேசு காட்டிய உண்மையின் வழியை அறிந்தும், உனக்கு கிடைத்த அருமையான காலத்தை குடித்து வெறித்து இப்படியாக நீ வீணாக்கி, உன் வாழ் க்கையை பாழாக்கிக் கொள்கின்றாயே என்று கேட்டார்? அதற்கு அவன் மறுமொழியாக: போதகர் ஐயா, ஆண்டவர் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட நல்ல கள்வனைப் போல, நான் மரிக்கும் தறுவாயில் மனந்திரும்பி விடுவேன் என்றான். இப்படியான மனிதர்களை நீங்க ளும் உங்கள் வாழ்வில் சந்தித்தி ருப்பீர்கள். இவர்கள் தாங்கள் போகின்ற வழி தவறானது என்று அறிந்திருக்கின்றார்கள். மனந்தி ரும்ப வேண்டிய அவசியத்தையும் நன்றாக புரிந்திருக்கின்றார் கள். ஆனாலும், இவர்கள் எப்போதும் தங்கள் ஆசை இச்சைகளை நிறை வேற்றும்படிக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளிலிருந்து தப்பிக் கொள்ளும்படி க்கு, வேதத்திலே காணும் சில தனித்துவமான சம்பவங்களை முழு மையான விளங்கிக் கொள்ளாமல், அவைகளை தங்கள் துர்குணத்திற்கு ஏற்றதாக புரட்டிக்கொள்கின்றார்கள். இவர்கள் வேத வார்த்தைகள் நித்திய ஜீவனுக்கென்று கொடுக்கப்பட்டதை மறந்து, விதண்டாவதங்களுக்கு ரியதாக மாற்றிக் கொள்கின்றார்கள். ஞாயிறு ஆராதனைக்கு தவறால் போ என்று கூறினால், அப்படியானால் "நோய்வாய் பட்டு கட்டில் கிடை யாய் கிடக்கின்றவன் பரலோகம் செல்ல மாட்டானோ" என்பார்கள். மது பான வெறி கொள்ளுதலை பற்றி கூறினால், "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷ னைத் தீட்டுப்படுத்தும்" என்றும், திரைப்படங்களை பார்த்து நெறிகெட்டு உலகப்போக்கிற்குள் போய்விடாதே என்று கூறினால், "சினிமா திரைப் படங்களை பார்க்க வேண்டாம்" என்று வேதம் கூறுகின்றதா என்பார்கள். தங்கள் அலங்கோலமான நடை உடைகளை பற்றி யாரும் கூறினால், தேவன் வெளிதோற்றத்தையல்ல, இருதயத்தையே பார்கின்றார் என்பார் கள். பிரியமானர்களே, இப்படிப்பட்டவர்கள், இணங்காதவர்கள், இட றலடைகின்றவர்களும், இடறலடையப்பண்ணுகின்றவர்களுகமாயிருப்ப வர்கள். பரம பிதா நடாத நாற்றுகள் எல்லாம் பிடுங்கப்ப டும் என்று ஆண்டவர் இயேசு கூறியிருகின்றார். எனவே, உங்கள் நாட் களை இப்பபடிப்பட்டவர்களோடு விரயப்படுத்தாமல், போதகத்தை மனத்தாழ் மையோடு ஏற்றுக் கொண்டு, தேவனுக்கு கீழ்படியுங்கள்.

**மத்தேயு 15:13**

என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, நித்திய ஜீவனுக்கென்று நீர் விளம்பிய வேதத்தின் மகத்துவதை நான் உணர்ந்தவனாக, உம்முடைய வார்த்தைகளின் வழியிலே வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | செப்டெம்பர் 8 | 🕮 மாலை வாசகம் – வெளி 22:11 – 12

# குறைவிலே தரித்து நிற்காதிருங்கள்

பொதுவாக, ஒவ்வொரு நோய்களும் வெளிப்படையான சில அறிகுறிகள் இருப்பதுபோல, மனிதர்களுடைய வாழ்க்கையிலும், அவர்கள் வாழ்வின் நிலைமைகளை குறித்த அறிகுறிகளையும் காணமுடியும். எடுத்துக்காட்டாக, பொதுவாக, படிக்க விருப்பமில்லாத மாணவனின் வாழ்க்கையிலே காணப்படும் வெளிப்படையான அறிகுறிகள் என்ன? பாடசாலைக்கு ஒழுங்காக செல்ல விருப்பமில்லை ஆதலால், பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களையும், வகுப்பிலுள்ள சக மாணவர்களின் நடத்தைகளைக் குறித்த விமர்சனங்கள் உண்டாகும். பாடசாலை அதிபரைக் குறித்த குறைகள் பேசப்படும்.இவைகளை நாம் யாவரும் நன்கு அறிந்திருக்கின்றோம், அநேகர் அவ்வழியாய் கடந்து வந்திருக்கி ன்றோம். நூற்றுக் கணக்கான மாணவர்களையும் அநேக ஆசிரியர்க ளைக் கொண்டதும், ஒருபோதும் ஒரு பிரச்சனைகள் நடக்காத ஒரு சம்பூரணமான பாடசாலையைஇந்த உலகிலே காணக்கூடுமோ? படிக்க மனதில்லாத மாணவனை எந்த பாடசாலையிலே சேர்த்துவிட்டாலும், அவன் கண்களுக்கு முன்பாக அங்குள்ள குறைகளே தெளிவாக தெரியும். அப்படிப்பட்ட மாணவனிடம், நீ தேசத்திலுள்ள எந்தப் பாடசாலை க்கு செல்ல விருப்புகின்றாய் என்று கேட்டால், அவன் வாயிலிருந்து சரியான பதிலை காண்பது அரிதாகவே இருக்கும். பாடசாலைக்கு செல்கின்றவர்கள் எல்லோரும் படித்து பட்டம் பெறுகின்றார்களா என்று அவன் கூறிக் கொள்வான். அதுபோலவே, தேவ ஆலோசனையை விரும்பாதவர்களும், தங்களை விசுவாச மார்க்கத்தார் என்று கூறிக் கொள்கின்றவர்களின் வாழ்விலே, பொதுவாக காணப்படும் அறிகுறிகள் என்ன? முதலாவதாக, அவர்கள் சபை கூடிவருதலைக் விட்டுவிட்டு, சபையையும், போதகர்களையும், விசுவாசிகளையும் குறித்து விமர்சித்துக் கொள்வார்கள். அப்படியானால் நீ எந்த சபைக்கு செல்லப் போகின்றாய் என்று கேட்டால், சபைக்கு செல்கின்றவர்கள் எல்லோரும் பரலோகம் போய்விடுவார்களா என்று கூறுவார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, விழிப்புள்ளவர்களாக இருங்கள். காலத்தை விரையப்படுத்தாமல், அருமையான நாட்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள். குறைவு நிறைந்த இந்த உலகத்திலே, குறைகளை மட்டுமே காண்கின்றர்களின், புத்தியும் மனசாட்சியும் அசுத்தமதாயிருப்பதால், அவர்கள் குறைகளிலே தரித்து நின்று விடுகின்றார்கள். பரிசுத்தத்தை நாடுகின்றவர்கள், பரிசுத்தத்திலே வளர்ந்து பெருகின்றார்கள்.

**தீத்து 1:16**

**அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது**

**ஜெபம்**: கோணலும் மாறுபாடான உலகத்திலே பரிசுத்த வாழ்க்கை வாழ என்னை வேறு பிரித்த தேவனே, வேதத்தின் தியானத்திலும், ஜெபத்திலும் அனுதினம் நான் வளரும்படி என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "அறிகுறி வெளிப்படாத நோய்கள்"

ஒரு சில நோய்களின் அறிகுறிகள் வெளிப்படாது மறைந்திருக்கின்றது. ஆனால், அத்தகைய நோய்கள் வெளிப்படும் போது, அதன் பின் விளைவுகள் பராதூரமானதாகவும், குணப்படுத்துவதற்கு காலம் கடந்த தாகவும் மாறிவிடுகின்றது. அதுபோலவே, விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்விலும், சில நோய்கள் மற்றவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்தி ருக்கின்றதாயும் அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றதாயும் இரு ந்து விடுகின்றது. சில வேளைக ளிலே சில விசுவாச மார்க்கத்தா ருடைய வாழ்க்கையானது "வெளி யில் ஒரு கோலமும், ஆலயத்திலே வேறு கோலமுமாக" இருந்து விடு கின்றது. உண்மை வெளிப்படும் நாளிலே, அவரவருடைய வாழ் விலே பெரும் அவமானமும், நிந் தையும் ஏற்படுகின்றது. சில விசு வாசிகள் தங்கள் ஆவிக்குரிய நோய்களை அல்லது நோய்களுக்கு இட் டுச் செல்லும் வழிகள் மறைத்து, ஒளித்து, இரகசியமாக வைத்திருக்கி ன்றார்கள். அப்படியாக அவர்கள் யாருக்கு மறைத்து வைக்கின்றார்கள்? தேவனுக்கோ அல்லது மனிதர்களுக்கோ? நிச்சயமாக தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லையென்று அவர்கள் திட்டமாக அறிந்திருக்கின் றார்கள். அப்படியானால் ஏன் அவர்கள் மனிதர்களுக்கோ சக விசு வாசிகளுக்கோ மறைக்கின்றார்கள்? ஏனெனில், கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு முன்பாக வெட்கப்பட்டாலும், மனிதர்களுக்கு முன்பாக வெட்கப்படக் கூடாது என்று மற்றய மனிதர்களுக்காக வாழ்வதை தங்கள் வாழ்விலே முதன்மைப் படுத்திக் கொள்கின்றார்கள். பிரியமான வர்களே, சில வேளைகளிலே மறைவாக பாவங்களை விட்டு விலகுவ தற்குகென்று சிலரிடம் ஆலோசனை கேட்டால், அவர்கள், அதை பல ரிடம் கூறி, உங்களை நியாயந்தீர்த்து விடும் சந்தர்ப்பங்கள் இருந்திரு க்கலாம். அதற்குரிய பலனை அவர்கள் அடைவார்கள். அதனால், ஒரு வரும் மறைவாக பாவங்களோடு தொடர்ந்து வாழ்ந்து விடுவது நல்லது என்று கூற முடியுமாக? கர்த்தருடைய நாளிலே கறை திறையற்ற மண வாட்டியாக அவர் முன்னிலையிலே நிற்கத்தக்கதாக, இந்த நாளிலே, மனதில் மறைந்திருப்பதை கர்த்தராகிய இயேசுவிடம் உண்மை மனதோடு தெரியப்படுத்துங்கள். அனுதினமும் வேதத்தை தியானித்து, ஜெபம் செய்யுங்கள், தேவ ஆவியானவர்தாமே நீங்கள் செய்ய வேண் டியவைகளை உங்களுக்கு வெளிப்படுத்தி, உங்களை சகல சத்திய த்திலும் வழிநடத்திச் செல்வார்.

**2 பேதுரு 3:14**

**கறையற்றவர்களும் பிழை யில்லாதவர்களுமாய்ச் சமா தானத்தோடே அவர் சந்நிதி யில் காணப்படும்படி ஜாக்கி ரதையாயிருங்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, சரீரத்தை மாத்திரம் அழிக்க வல்லவர்களுக்கு பயப்படாமல், ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவராகிய உமக்கே பயந்து நடக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேறினவர்களாகும்படிக்கு...

ஆரம்ப பிரிவிலே பாடம் கற்று வரும் மாணவனொருவன், தன் வகுபிலுள்ள வேறொரு மாணவனுடைய பொருளொன்றை களவாக எடுத்து விட்டு, தான் அதை எடுக்கவில்லை என்று பொய் சொல்லி விட்டான். அதை அறிந்த வகுப்பாசியர், நடந்த சம்பவத்தை ஆராய்ந்து உறுதி செய்த பின்பு, பாடாசாலையின் விதிமுறைகளின் படி அவனைத் தண்டித்தார். அந்த மாணவனுடைய பெற்றோர், வகுப்பாசியரை சந்தித்து அவரோடு பேசினார்கள். நடந்தது உண்மை ஆனால், சக மாணவர்களுக்கு முன்பாக அவனை அவமானப்படுத்தாமல், காரியத்தை அப்படியே விட்டு விடுங்கள் என்று தயவாக கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அந்த ஆசிரியர் பெற்றோரை நோக்கி: உங்கள் மகனானவன், ஒருசிலமாணர்களுக்குமுன் அவமானமடைவதையோ அல்லது அவன் இப்படியே வளர்ந்து தேசம் முழுவதிலுமுள்ளவர்களுக்கு முன்பாக அவமானமடைந்து சிறைக்கு செல்வதையோ விருப்புகின்றீர்கள்? பாருங்கள், எந்த மாணவனையும் அவமானப்படுத்துவது என்னுடைய நோக்கமல்ல. ஆனால், அவர்கள் ஆளுமையிலே வளர்ந்து தேற வேண்டும். அவர்கள் பெலவீனங்கள் அவர்களுக்குள் வேர்விட்டு வளரமுன்பதாக, அதை முளையிலே கிள்ளி விட வேண்டும். குற்றங்களை ஏற்றுக் கொண்டு, மனம் வருந்த பழகிக் கொள்ள வேண்டும். குற்றங்களை செய்தால் பின்விளைவுகளும், அவமானங்களும், தண்டனைகளும் உண்டு என்பதை எல்லா மாணவர்களும் ஆரம்பத்திலிருந்தே அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு தயவாக ஆலோசனை கூறினார். பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்களோ அல்லது உங்கள் பிள்ளைகளோ ஒரு சில விசுவாசிகளுக்கு முன் அவமானமடைவதையோ அல்லது கர்த்தருடைய நாளிலே அவருக்கு முன்பாக அவமானமடைவதையோ விருப்புகின்றீர்கள்? சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் மனம் மனந்திருப்புதலைக் குறித்து உணர்வற்றுப் போக முன்னதாக, வேதனை உண்டாக்கும் வழிகள், ஆரம்பத்திலேயே, அவைகள் முளைத்தெழும்பி வேர் விடுவதற்கு முன்னதாக, தேவனிடத்திலே அறிக்கையுங்கள். அவர் எல்லாப் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**1 யோவான் 1:9**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்,பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்:** பரலோக தேவனே, உம்முடைய நாளிலே உம்மால் அறியப்படாத அந்நியனாக உமது சந்நிதானத்திலே நிற்காதபடிக்கு, எனக்கு கொடுக்கப்பட்ட அருமையான நாட்களை பிரயோஜனப்பத்திக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆறாத காயங்கள் மாறாத புண்கள்

"இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை. அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரண முமுள்ளது. அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெ யினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது." என்று உணர்வற்ற வாழ்க்கை வாழும் தம்முடைய ஜனத்திற்கு, கர்த்தர் கூறியிருக்கின்றார். ஏன் உங் களுடைய சரீரத்திலுள்ள புண்கள் மனைந்து சீழ் பிடிப்பதற்கு இடம் கொடுக்க வேண்டும்? வைத்தியரிடம் போனால் அவர் அதற்குரிய வைத் தியத்தை செய்து சுகப்படுத்துவார் அல்லவோ. ஏன் உங்களுடைய மன ப்புண்கள், ஆற்றப்படாமல் இருக்க வேண்டும்? கசப்பு, வன்மம், வைராக்கியம், பகை, எரிச்சல் இவைகள் தங்குவதற்கு உங்கள் மனதை வீடாக்கிக் கொடுகின்றீர்களா? அவை சீக்கிரமான பெருகி, உங்கள் மனதை கற்பாறையைப் போல கடினப்ப டுத்திக் போடும். உங்கள் நிம்மதியான வாழ்க்கைக்கு, நீங்கள் படும் பிரயாசங்களை அவை வீணாக்கி, உங்கள் வாழ்க்கையையும், உங்களை சூழ இருக்கும் அநேக ருடைய வாழ்க்கையையும் அவை பாழக்கிப் போடும் என்பதை அறியாதிருக்கின்றீர்களா? அவைகள் நோய்யைப் போல பற்றிக் கொண்டு, நோவைப் பெருக்கப் பண்ணும். பிரியமான வர்களே, மனப் புண்களை ஆற்றும் பரம வைத்தியர் உங்களுக்கு அரு கிலிருப்பதை சீக்கிரமாய் மறந்து போனீர்களா? மனநோய்களினாலே நீங்கள் சற்றேனும் அழிந்து போகும்படிக்கல்ல, அவைகளிலிருந்து நீங்கள் முற்றாக குணமடைந்து, சுக வாழ்வு வாழும்படிக்கு கர்த்தர் உங்களை அன்போடு அழைக்கின்றார். "உங்கள் பாவங்கள் சிவேரெ ன்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் அவைகள் இரத் தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." என்று கூறியி ருக்கின்றார். அந்த மேலான நன்மையை உங்கள் வாழ்விலே நீங்கள் கண்டடையும்படிக்கு நீங்கள் செய்ய வேண்டிய காரியம் என்ன? அவர் சமுகத்திலே மனம்பொருந்தி அவருடைய வார்த்தைக்கு கீழ்படியுங்கள். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்க ளையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது.

**1 யோவான் 1:7**

**அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.**

**ஜெபம்**: ஆறாத காயங்கள் ஆற்றுகின்ற தேவனே, மாம்சத்தின் கிரியை களின் இல்லமாக என் உள்ளத்தை நான் மாற்றிவிடாதபடிக்கு, எப்போதும் உமக்கு முன்பாக பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிட வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் விடுதலை சமீபமாக இருக்கின்றது

ஒரு மனிதனானவன், தன் சரீரத்திலே சிறிதாக ஏற்பட்ட நோவானது, அதிகரித்துக் கொண்டு போனதினாலே, அதிலிருந்து எப்படியாகவது சுகமடையம்படிக்கு, பெருந் தொயையான பணத்தை செலவு செய்வு, கடல் கடந்து சென்று, உலகிலே அதி சிறந்த வைத்தியரை சந்தித்து, அதற்குரிய மருந்துகளைளும், பயிற்சி முறைகளைளும், உண்ண வேண்டிய உணவுகளைளும், வாழ்விலே தவிரக்க வேண்டிய காரியங்களையும் கேட்டு பெற்றுக் கொண்டு, தன் ஊருக்கு திரும்பி அவைகளை கடைப்பிடிக்கும்ப டிக்கு மிகவும் பிரயாசப்பட்டான். ஒரு விசுவாசியின் வாழ்விலே ஆன்மீக நோய் ஏற்படும் போது அவன் என்ன செய்ய வேண்டும்? பெருந்தொகையான காணிக்கைகளோடு பிரமுகர்களை சந்திக்க, கடல் கடந்து செல்ல வேண்டுமோ? அத்தகைவர்களை சந்திக்க எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? சற்று சிந்தித்துப் பாருங்கள். "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல என்று தேவானகிய கர்த்தர் கூறியிருக்கின்றார். மனிதர்கள் தங்கள் கிரியைகளினாலே விடுதலையடைய முடியாதபடி பாவ இருளிலே அகப்பட்டிருந்ததால், அன்புள்ள பிதாவாகிய தேவன் தாமே, தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி, அவர் வழியாக, பாவ கட்டுகளிலிருந்து மனிதர்கள் விடுதலையடையும் வழியை உண்டாக்கினார். விலை மதிக்க முடியாத அந்த விடுதலையை, அவர் இலவசமாக நமக்கு கொடுத்திருக்கின்றார். அதை பணம் கொடுத்து வாங்குவதற்கு அது விற்பனைப் பொருளல்ல. உங்கள் அறைக் கதவை பூட்டிக் கொண்டு, உங்கள் இதயக் கதவை கர்த்தருக்கு திறந்து விடுங்கள். அவர் சமுகத்திலே மனம்பொருந்த அவருடைய வார்த்தைக்கு கீழ்படியுங்கள். சத்திய ஆவியானவர் உங்களை நடத்திச் செல்வார்.

**உபாகமம் 30:14**

**நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது.**

**ஜெபம்:** என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்து ஏறப்பண்ணி, நான் குழியில் இறங்காதபடி என்னை உயிரோடே காத்த தேவனே, உம் வார்த்தைக்கு கீழ்படிந்து நடக்கும் உணர்வுள்ள உள்ளத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | செப்டெம்பர் 13 | 📖 மாலை வாசகம் – 1 கொரி 10:4 –5

# பூட்டப்படாத கதவுகள்

ஒரு பட்டணத்திலிருந்து கிராமமொன்றிற்கு புதிதாக வந்து குடியேறிய மனிதனொருவன், அவன் வாங்கிய வீட்டையும் நிலத்தையும் சுற்றி நேர்த்தியாக வேலியடைத்து, வீட்டின் முன்புறத்திலே தூண்களை எழுப்பி, பெலமான வெளிக் கதவைப் போட்டான். தன் காணியிலே சில தென்னம்பிள்ளைகளையும், வேறு சில கனி தரும் மரங்களையும் நட்டு, பராமரித்து வந்தான். ஆனால், அவன் முற்பு றத்திலே அவன் போட்ட, தெருவிற்கு செல்லும் வெளிக்கதவை அவ்வப்போது பூட்டுவதற்கு மறந்து போய்விடுவான். அவனுடைய அயலிலே வாழ்ந்து வந்த சிலர், அவனை நோக்கி, நீங்கள் அந்தக்கதவை பூட்ட மறந்து போய் விடுகின்றீர்கள். நீங்கள் நன்றாக பராமரித்து வரும் தென்னம்பிள்ளைகளையும், மற்றய மரங்களையும் மாடுகள் மேய்ந்து விடும் என்று கூறினார்கள். எத்தனையோ நாட்கள் கதவு திறந்து கிடந்தது, ஒன்றுமே நடக்கவில்லை என்று அவர்களுடைய வார்த்தைகளை அவன் பொருட்படுத்தாது போய்விட்டான். ஆனால், ஒரு நாள் அயலவர்கள் கூறியது போல, அவ்வழியாக வந்த மாடுகள் உள்ளே சென்று மரங்கள் யாவற்றையும் மேய்ந்து விட்டு சென்று விட்டது. அந்த அயலவர்கள் கூறிய ஆலோசனை பெரிதான வெளிப்பாடுமல்ல. அதை அந்த மனிதனனானவன் செய்வதற்கு அந்த ஆலோசனைகள் கடினமாக காரியமுமல்ல. ஆனாலும், அசட்டை செய்யும் மனநிலையினால், அவன் பிரயாசம் யாவும் வீணாய் போய்விட்டது. பிரியமான சகோதர சகோதரிகளே, சிலர் இன்று இந்த தியானத்தைக்கூட அற்பமாக எண்ணி, வேதத்தில் ஆழமான காரியங்களை அறிய வேண்டும் என்று இலகுவானதும், எளிதாக புரிந்துகொள்ளக்கூடியதுமான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆலோசனைகளை அசட்டை செய்து விடலாம். நாம் இந்த உலகத்திலே வாழ்ந்தாலும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே, நாம் பூட்டி வைக்க வேண்டிய கதவுகள் உண்டு. நம்முடைய சிந்தையை உலகத்திற்கும் உலக காரியங்களுக்கும் திறந்து வைக்காமல், வேத வார்த்தைகளின் தியானித்திற்கே எப்போதும் திறந்து வைக்க வேண்டும். வீட்டிலே பூட்டப்படாத கதவுகள் வழியாக கள்வர்கள் உள்நுழைவது போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்விலும், தேவனுக்கு, விரோதமான சிந்தனைகள் உள்நுழையாதபடிக்கும், தேவனை அறிகின்ற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய் காத்துக் கொள்வோமாக.

**நீதிமொழிகள் 12:15**

**மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்; ஆலோசனைக்குச் செவிகொடுக்கிறவனோ ஞானமுள்ளவன்.**

**ஜெபம்**: என் மேல் உம் கண்களை வைத்து ஆலோசனை தரும் தேவனே, உம்முடைய ஆலோசனைகளை நான் அற்பமாக எண்ணாமல், ஞானமுள்ளவனாக நடந்து கொள்ள உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – கொலோ 3:8

# வெளியே துரத்திவிடப்பட வேண்டியவைகள்

ஒரு கிராமதிலே வாழ்ந்து வந்த பண்ணை சொந்தக் காரனொருவன், சில மரங்களை வெட்டி தடிகளை எடுக்கும்படிக்கு காட்டுப் பகுதியான இடத்திற்கு சென்று கொண்டிருந்தான். அங்கே ஒரு நாய் குட்டியொன்று தனியாக விடப்பட்டு, சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு பரிதாப்பட்ட அந்த பண்ணையின் சொந்தக்காரன், அதை எடுத்து, தன் பண்ணைக்கு கொண்டு வந்து மாட்டு பால் கொடுத்து அதை பராமரித்து வந்தான். சில கிழமைகள் சென்ற பின்பு, அது நாய் குட்டியல்ல, அது ஓநாயின் குட்டியென்று அறிந்து கொண்டான். பார்வைக்கு அது மிக வும் அழகானதாகவும், குடும்பத்தா ரோடு அது செல்லமாகவும் பழக்கிக் கொண்டதால், அதை வீட்டிற்கு தகு ந்து வண்ணமாக பயிற்சி செய்து வளர்ப்போம் என் தன் வீட்டிலே வளர் த்து வந்தான். அந்த ஓநாயும், செல் லப் பிராணி போல வீட்டிலே வளர்ந்து வந்தது. ஒரு நாள் அந்த ஓநாய் க்கு ஆகாரம் போடப் பிந்தியதால், அது வீட்டிலே மேய்ந்த கோழி குஞ்சொன்றை கடித்து விட்டது. அதை அறிந்து பண்ணைச் சொந்தக் காரன், அதற்கு நேரத்திற்கு சாப்படாடு போடாதது, எங்களுடைய பிழை என்று இனி அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்வோம் என்றான். சில நாட்கள் சென்ற பின்பு, பண்ணையிலிருந்த சில ஆடுகளை கடித்து காயப்படுத்த ஆரம்பித்தது. அதையும் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டா ர்கள். காலப்போக்கிலே, ஒருநாள் அந்த ஓநாய் அவனுடைய குமார ர்களில் ஒருவனை கடித்து விட்டபின்பு அவன் உணர்வடைந்தான். தன் பண்ணை கதவை திறந்து, அந்த ஓநாய் இருக்க வேண்டிய இடத்திற்கு அதை அனுப்பி விட்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த உலகிலே காணப்படும் அநேக காரியங்கள், ஆரம்பத்திலே புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சி க்கப்பட த்தக்கதாயும் காணப்படும். ஆனால் அவைகள் குடிகொள்ள வேண்டிய இடம் நிச்சயமாக நம்முடைய இருதயம் அல்ல. ஆனாலும், அவைகளை இச்சிக்கின்றவர்கள், அவைகளால் உருவக் குத்தப்பட்டு வேதனையடைகின்றார்கள். வேதனை அடைகின்ற வேளையிலும், இதயக் கதவை திறந்து அவைகளை வெளியேற்றுவதற்கு பதிலாக, அவைகள் கட்டிக் காத்துக் கொள்வதற்கு வழிகளை தேடுகின்றார்கள். நீங்களோ, உலகத்துக் குரியவைகளை, உங்கள் இருதயத்தில் இருத்து அகற்றி, அவை இருக்க வேண்டிய இடத்தில் விட்டுவிடுங்கள்.

**எபேசியர் 4:31**

**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குண மும் உங்களைவிட்டு நீங் கக்கடவது.**

**ஜெபம்:** தேவ ஆலயமாக கட்டப்பட்டு வரும்படி என்னை அழைத்த தேவனே, பரிசுத்தமான அந்த ஆலயத்திற்கு புறம்மே இருக்க வேண்டிய வைகளை நான் உள்ளே தக்க வைக்காதபடிக்கு என்னை வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல அறிக்கை செய்யுங்கள்

மாலை வேளையிலே நண்பர்களோடு சேர்ந்து படிக்கப் போகின்றேன் என்று சென்ற மகனானவனொருவன், தன் நண்பர்களோடு சேர்ந்து திரைப்பட அரங்கிற்கு சென்று, திரைப்படத்தை பார்த்து, பின்பு அவர்களோடு உல்லாசமாக நேரத்தை கழித்துக் கொண்டிருந்தான். அவன் வீடு திரும்புவதற்கு முன்னதாகவே, அவன் அன்று நண்பர்களோடு சேர்ந்து நடப்பித்தகாரியங்கள் யாவையும் அவன் தகப்பனானவர் அறிந்து, அவன் படிக்கச் சென்ற வீட்டிற்கு சென்று, அவன் அங்கே இல்லையென்பதையும் உறுதி செய்து கொண்டார். இராத்திரியிலே, தன் பாடப் புத்தகங்களோடு வீடு திரும்பிய மகனானவை அழைத்து, நீ எங்கிருந்து வருகின்றாய் என்று அவனோடு வழமையாக பேசுகின்றதை போலஅமைதலாக தொனியிலே கேட்டார். அதற்கு மகனானவன் நண்பன் வீட்டிலிருந்து பாடங்களை படித்தேன் என்றான். அதற்கு தகப்பனானவர்: நண்பனுடைய வீட்டில் திரையரங்கு இருக்கின்றதோ என்று கேட்டார். தகப்பனானவர் காரியத்தை அறிந்திருக்கின்றார் என்று அறிந்த பின்பும், அவன் அவரை நோக்கி: நீங்கள் என்னை நம்பாமல் எனக்கு பின்னாக வருகின்றீர்களோ என்று கேட்டுக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, நம்முடைய பரமபிதாயாவற்றையும் அறிந்திருக்கின்றார். அவருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர் நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்." என்று சர்வ வல்லமையுள்ள நம் தேவனைக் குறித்து, ஒரு தேவ பக்தன் பாடியிருக்கின்றார். ஆனால், மனிதர்கள் தங்கள் குற்றங் குறைகளை அறிக்கை பண்ணும் பொருட்டு அவர்களுக்கு ஒரு சந்தர்பத்தை கொடுக்கும்படி, அவர் "நீ என்ன செய்தாய், எங்கிருந்து வருகின்றாய்" என்று கேட்கின்றார். அவர் கேட்கும் வேளையிலே, அவர் பாதத்திலே உங்களை தாழ்த்தி, இரக்கத்தை பெற்றுக் கொள்ளும்படிக்கு, உங்கள் குற்றங் குறைகளை அவரிடத்தில் அறிக்கை செய்யுங்கள்.

**நீதிமொழிகள் 28:13**

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.**

**ஜெபம்:** தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிற பரம தந்தையே, நான் உம்முடைய சமுகத்திலே துணிகரம் கொள்ளாதபடிக்கு என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒளிந்து மறைந்து கொள்ளாதிருங்கள்

ஆதிப் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்படியாமல், பிசாசானவனின் சத்ததிற்கு கீழ்படிந்து பாவம் செய்த போது, அவர்களுக்குள் குற்ற உணர்வு ஏற்பட்டது. அப்பொழுது பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். நடந்த சம்பவம் யாவற்றையும் அறிந்த தேவனானாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். ஆதாம் எங்கே இருக்கின்றான் என்றும், அவன் என்ன செய்தான் என்றும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார். ஆனாலும், அவன் உண்மையை பேசி, நல்ல அறிக்கை செய்ய வேண்டும் என்று அவனுக்கு ஒரு அருமையாக சந்தர்ப்பத்தைக் கொடுத்தார். ஆனால், பாவம் செய்யும் சுபாவம் அவனை ஆண்டு கொண்ட படியால், அவன் தன் பாவத்தை அறிக்கை செய்ய மனதில்லாமல், தன் செய்கையை நியாயப்படுத்தி, நீர் தந்த இந்த ஸ்திரி என்று முதலாவதாக தேவனையும், பின்பு தன் மனைவியையும் குற்றம் சாட்டினான். விசுவாசிகள் தங்கள் வாழ்விலே தவறும் நேரங்கள் உண்டு. அந்த வேளையிலே, தேவனுடைய சத்தம் முதலாவதாக சுத்த மனச்சாட்சியிலிருந்தும், பின்பு தேவன் ஏற்படுத்திய மனிதர்கள், முறைமைகள் வழியாகவும் தொனிக்கின்றது. அந்த வேளைகளிலே, சிலர் தங்கள் கிரியைகளை நியாயப்படுத்தும்படி சாட்டுப் போக்குகளை சொல்கின்றார்கள். வேறு சிலரோ, நான் அப்படி செய்யவில்லை, உங்களால் முடிந்தால் இரண்டு சாட்சிகளை கொண்டு வாருங்கள் என்பார்கள். நாம் அப்படியாக சந்தர்பத்திகு தப்பிக் கொள்கின்றவர்களாவும், விதண்டாவாதம் செய்கின்றவர்களாகவும் இல்லாதபடிக்கு, தேவனுக்கு முன்பாக நம்முடைய சுத்த மனசாட்சியை உணர்வுள்ளதாக காத்துக் கொள்ளும்படிக்கு நல்ல அறிக்கை செய்கின்றவர்களாக காணப்பட வேண்டும். இது மற்றவர்களுடைய அழுத்த்தினால் உண்டாகாமல், நாம் நம்முடைய குற்றங்களை உணர்ந்து மனதார, தேவனிடத்திலும், சம்பந்தப்பட்ட மனிதர்களிடத்திலும் நல்ல அறிக்கை செய்து தேவனுடைய இரக்கத்தை பெற்றுக் கொள்ளுகின்ற கீழ்படிவுள்ள பிள்ளைகளாக காணப்பட வேண்டும். தேவன் மன்னிக்க தயை பெருத்தவராயிருக்கின்றார்.

**ஆதியாகமம் 3:9**

**அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார்.**

**ஜெபம்:** நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமல் இருக்கின்ற பரலோக தகப்பனே, நான் எப்போதும் உம்முடைய சத்தத்தை கேட்டு, அதற்கு கீழ்படிக்கின்ற உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுக்கு பிரியமானவைகள்

காயீன், தான் கொடுத்த காணிக்கையை தேவனாகிய கர்த்தர் அங்கிக ரிக்கவில்லை என்றும், தன் சகோதரனாகிய ஆபேலின் காணிக்கையை அவர் ஏற்றுக் கொண்டார் என்றும் காயீன் அறிந்த போது, அதனிமித்தம் அவனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அவன் முகநாடி ஏன் வேறுபட்டது என் பதை நன்றாக அறிந்திருந்த தேவனானவர் புறக்கணித்து தள்ளு ம்படிக் கல்ல, காயீன் தன் மனதில், தன் சகோதனைக் குறித்து கொண் டிக்கும் எரிச்சலானது, பெரும் பாத கத்திற்கு காயீனனை இட்டுச் செல் வதற்கு முன்னராக, அவன் உணர்வ டைய வேண்டும் என்றே அவனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண் டாயிற்று?உன் முகநாடி ஏன் வேறு பட்டது? நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படு த்திருக்கும் அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார். ஆனாலும், அவன் தேவனிடத்தின் அறிக்கை செய்ய மனதில் லாதவ னாய், தன் இருதயத்தை பொல்லாங்க ளுக்கு கொடுத்திரு ந்ததால், தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியை கள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததன் நிமித்தமே, தேவனுக்கு பிரிய மான காணிக்கையை செலுத்திய தன் சகோதராகிய ஆபேலை கொலை செய்தான் (1 யோவான் 3:12). அவன் அப்படிப்பட்ட பெரும் பாதக த்தை செய்தான் என்று அறிந்த பின்னரும், தேவனாகிய கர்த்தர் காயீ னை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார் அதற்கு அவன்: நான் அறியேன் என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள் விப்பட்ட விசே ஷமாயிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய யோவான், தேவனு டைய திட்டத்தை குறித்து மறுபடியும் வலியுறுத்தி கூறியிருக்கின்றார். தேவன் நம்மிடத்தில் கேள்விகளை கேட்கும் போது, நாம் பொல்லா ங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனை ப்போலிருக்கக் கூடாது. மற்றவர்கள் தேவனுக்கு பிரியமான, சாட் சியான வாழ்க்கை வாழும் போது, அதைக் குறித்து நாம் ஒரு போதும் எரிச்சலடையாமல், நம்முடைய குறைகளை அறிந்து அவைகளை தேவ னுக்கு முன்பாக அறிக்கயைிட்டு, அவைகளை விட்டுவிட்டு, தேவனுக்கு பிரியமானவை களை செய்ய கற்றுக் கொள்ளக் கடவோமாக.

**1 யோவான் 3:18**

**என் பிள்ளைகளே, வசனத்தி னாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மை யினாலும் அன்புகூரக்கட வோம்**

**ஜெபம்**: தம்முடைய பரிசுத்தமான வித்தை எனகுக்குள் தரித்திருக்கிற தேவனே, நான் மற்றவர்களுடைய நற்கிரியைகளைக் குறித்து எரிச்ச லடையாமல், உமக்கு பிரியமான வாழ்க்கை வாழ வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | செப்டெம்பர் 18 | 📖 மாலை வாசகம் – எபிரெயர் 11:4

# ஒருவனும் கெட்டுப்போகாமல்...

ஆபேல் கொடுத்த காணிக்கையை தேவனாவர் ஏற்றுக் கொண்டார். ஆனால், காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் ஏற்றுக் கொள்ள வில்லை. அப்படியானால் தேவனிடத்தில் பட்சபாத உண்டோ? அப்படி யல்ல. தேவனிடத்தில் அநீதி இல்லை. தேவனிடத்தில் பட்சபாதமில்லை. (ரோமர் 9:14, 2:11). "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் அதி னாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான் அவனுடைய காணிக்கை களைக்குறித்து தேவனே சாட்சிகொ டுத்தார் அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று பரிசுத்த வேதா மம் கூறுகின்றது. காயீன் தன் மன தை பொல்லாங்கிலிருந்து மாற்றிக் கொண்டு, தேவனிடத்தின் தன்னை ஒப்புக் கொடுக்கும்படியாக சந்தர் பங்கள் உண்டாயிருந்தும், அவன் அவைகளை அசட்டை செய்தான். நம்முடைய தேவனாகிய கர்த்தர் தாமே, எக்காலத்திலும், மனந்திரும்பு கின்ற இருதயத்தை அவர் ஒருபோதும் புறக்கணித்ததில்லை, புறக்கணி ப்பதுமில்லை. ஒருவரும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதே அவருடைய அநாதி தீர்மானமாயிருக்கின்றது. ஒரு விசுவாசியானவன், தேவனுக்கு பிரியமில்லாத ஸ்தோத்திரபலிகளை செலுத்துகின்றான் என்றால், அவனுடைய வழிகள் தேவனுக்கு பிரியமா னவைகள் அல்ல. அது அவன் வாழ்வின் முடிவாக இருக்க வேண்டிய அவசியமுமல்ல. அவன் மனந்திரும்பி, தன் வழிகளை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, தேவனிடத்தில் உதவியை கேட்கும் போது, அவர் அவனை ஏற்றுக் கொண்டு வழிநடத்த ஆயத்தமுள்ளவராகவே இருக்கி ன்றார். வேதத்திலே காணும் பாத்திரங்களிலே, தேவன் ஏற்றுக் கொள் ளாத பாத்திரங்களின் வாழ்க்கை ஆராய்ந்து பார்க்கும் போது, அவர்கள் வாழ்விலே தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் அசட்டை செய்து வாழும் மனந்திரும்பாத உணர்வற்ற இருதயம் அவர்களிடம் இருந்ததை காணலாம். நாமோ அப்படியிராமல், தேவன்மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிட்டு, எந்த சூழ்நிலையிலும் அவரைப் பற்றிக் கொண்டும் வாழும் வாழ்க்கையை தெரிந்து கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தை நம்மோடு பேசி, நம்மை கடிந்து கொள்ளும்போது, நாம் மனத்தாழ்மையோடு மனந்திம்பி அவரிடத்தில் சேர்ந்து கொள்வோமாக.

**சங்கீதம் 51:17**

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்ட தும்நருங்குண்டதுமானஇரு தயத்தை நீர் புறக்கணியீர்.

**ஜெபம்:** மனந்திரும்புகின்ற பாவியைத் அரவணைத்து ஏற்றுக் கொள்ளு கின்ற தேவனே, உமக்கு பிரியமில்லாத காரியங்களை என் வாழ்விலி ருந்து நான் அகற்றிப் போட உணர்வுள்ள இருதத்தை தந்தருள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிருபையை பொழிகின்ற தேவன்

அந்நிய தேவர்களின் தீர்க்கதரிசிகளுக்கு முன்பாக, வானத்திலிருந்து அக்கினியை வரவித்து, கர்த்தரே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் என்று பலத்த கிரியைகளை நடப்பித்த எலியா என்னும் மெய் தேவனாகிய கர்த்தருடைய தீர்க்கதரியானவன், ஓரேப் பர்வத்த்திலே ஒரு கெபிக்குள்ளே போய் தங்கியிருந்தான். தன்னுடைய தாசனாகிய எலியா செய்த யாவற்றையும், தற்போது அவன் தன் பிராணனுக்கு பயந்து ஒளிந்திருப்பதையும் நன்கு அறிந்திருந்த தேவனாகிய கர்த்தர் எலியாவை நோக்கி: இதோ, எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்? என்றார். கர்த்தருடையவர்கள் கர்த்தர்மேல் விசுவாசம் வைத்திருப்பதால், அவர் முன்னிலையில் தேவ பயத்தோடு நடக்கின்றவர்கள். அவர்கள் மனுஷர்களுடைய மிரட்டல்களுக்கு அஞ்சாதவர்கள். ஆனால், எலியாவோ, ராஜாவாகிய ஆகாபின் மனைவி தன்னைக் கொன்று போடுவாள் என்று பயந்திருந்தான். கர்த்தர் அவனிடம் என்ன காரியம் என்று கேட்ட போது, அவன் தன் மனதை கர்த்தருக்கு மறைக்காமல், தன் மனதிலுள்ள பயங்கள் யாவற்றையும் அவருக்கு கூறினான். அப்பொழுது கர்த்தர், அவன் செய்ய வேண்டிய காரியங்களையும், இனி நடக்கவிருக்கும் சம்பவங்களையும் அவனுக்கு கூறி, தனக்கு பயந்து நடக்கின்ற ஏழாயிரம் பேரை தான் மிகுதியாக வைத்திருக்கின்றேன் என்று கூறி எலியாவை திடப்படுத்தினார். ஆம், பிரியமான சகோதர சகோதரிகளே, நீங்கள் தேவ சமுகத்திலே ஜெபம் செய்யும் போது, உங்கள் உள்ளமதின் அழுத்தும் பாரங்களையும், பயங்களையும், தீர்க்தரிசியாகிய எலியாவைப் போல, உள்ளபடியயே கர்த்தருக்கு தெரியப்படுத்துங்கள். அவர் முன்னிலையிலே பொய்களை பேசாமலும், சாட்டுப்போக்குகளை கூறாமலும், உங்கள் பெலவீனங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். காலை தோறும் புதுக் கிருபை தரும் தேவனானவர், உங்களை பெலனத்தினால் இடைக்கட்டி, நீங்கள் செய்ய வேண்டியவைகளைா உங்களுக்கு கற்றுக் கொடுப்பார். உங்கள் பெலவீனத்திலே தம்முடைய கிருபை பூரணமாக விளங்கும்படி செய்வார். அவர் நம்முடைய தப்பிதங்களுக்கு தக்கதாக நீதியைச் சரிக்கட்டாமல், நம்மேல் மனதுருகும் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனாக இருக்கின்றார்.

**சங்கீதம் 103:10**

**அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்.**

**ஜெபம்:** என்னுடைய மீறுதல்களுக்கு தக்கதாக எனக்கு செய்யாமல் கிருபையை என்மேல் பொழியும் தேவனே, உம்முடைய சமுகத்திலே மனமேட்டிமைகொள்ளாமல் மனத்தாழ்மையோடு சேரும்படிக்கு என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குறைகளை நியாயப்படுத்தாதிருங்கள்

ஒரு சமயம், கர்த்தர் நாத்தான் என்னும் தீர்க்தரிசியை, தாவீது ராஜாவினிடத்தில் அனுப்பினார். தீர்க்கதரிசியானவன், ராஜாவை நோக்கி: ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் வெகு திரளாயிருந்தது. தரித்திரனுக்கோ தான் கொண்டு வளர்த்த ஒரே சின்ன ஆட்டுக் குட்டியைத் தவிர வேறொன்றும் இல்லாதிருந்தது. அந்த ஐசுவரியவானிடத்தின் வந்த வழிப்போக்கனை போஷிக்கும்படிக்கு, தன்னிடத்திலிருந்த ஆடுமாடுகளில் ஒன்றை பிடிக்க மனதில்லாமல், அந்தத் தரித்திரனிடமிருந்த ஒரே ஆட்டிக்குட்டியை பிடித்து, அதை அந்த வழிப்போக்கனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான். இந்த சம்பவத்தைக் கேட்ட தாவீது ராஜா, அந்த ஐசுவரியவான்மேல் மிகவும் கோபமூண்டனாகி, தீர்க்கதரிசியைப் பார்த்து: இந்தக் காரியத்தை செய்தவன் மரணத்திற்கு பாத்திரன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்கின்றேன் என்றான். அவன் இரக்கமற்றவனாய் இந்தக் காரியத்தை செய்தபடியினால், அந்தக் ஆட்டுக்குட்டிகாக நாலத்தனையாக திரும்பச் செலுத்த வேண்டும் என்றான். அதற்கு தீர்க்கதரிசியாக நாத்தான்வேல்: நீயே அந்த மனுஷன் என்று தாவீது ராஜா செய்த பெரிய துரோகத்தை உணர வைத்தான். காரியத்தை உணர்ந்து கொண்ட தாவீது ராஜாவோ, தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல், நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன் என்று தன்னைத் தாழ்தி, மனம் வருந்தினான். அவன் சாகாதபடிக்கு கர்த்தர் அவன் பாவம் நீங்கச் செய்தார். சில வேளைகளிலே, சில விசுவாசிகள், தேவன் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்து போய், அநியாயங்களை செய்வதற்கோ அல்லது அதற்கு உடந்தையாக இருப்பதற்கோ தங்களை ஒப்புக் கொடுத்து விடுகின்றார்கள். நாம் அப்படியான சூழ்நிலைகளிலே நம்மை சிக்க வைத்துக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அறிந்தோ அறியாமலோ அநியாயங்களை செய்தோம் என்று உணரும் தருணத்திலே, தாமதமின்றி, நிபந்தனையின்றி, நம்முடைய செல்வாக்குகளை துஷ்பிரயோகம் செய்யாதபடிக்கு, நாம் நம்மை கர்த்தருடைய பாதத்திலே ஒப்புக் கொடுக்க வேண்டும். நம்முடைய நருக்குண்ட இருதயத்தை காணும் கர்த்தர், அதை புறக்கணிக்காமல் ஏற்றுக் கொண்டு நமக்கு இரக்கஞ் செய்வார்.

**சங்கீதம் 145:8**

**கர்த்தர் இரக்கமும் மன உருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்.**

**ஜெபம்:** மன்னிக்கும் பரம தந்தையே, வேதனை உண்டாக்கும் வழிகளிலே அடியேன் சிக்கிக் கொள்ளாதபடிக்கு, உமக்கு முன்பாக எப்போதும் உணர்வுள்ளவனாக நடந்து கொள்ள பிரகாசமுள்ள மனக் கண்களை தந்த வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | செப்டெம்பர் 21 | 📖 மாலை வாசகம் – யோவான் 14:17

# உத்தம மனதுடையவர்களாயிருங்கள்

சில விசுவாசிகளுடைய வாழ்க்ககையிலே, அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை தெட்டத் தெளிவாக அறிந்திருந்தும், தங்கள் சொந்த விருப்பங்களை நடத்தி முடிப்பதற்காக, தேவ வார்த்தைக்கு விரோதமாக பாவம் செய்த பின்பு, மனம்வருந்த மனதில்லாமல், "நான் அதை நன்மை கருதியே செய்தேன், கர்த்தருக்காக அதை செய்தேன்" என்று சாட்டுப் போக்குகள் சொல்வதை கேட்டிருப்பீர்கள் அல்லது ஒரு வேளை கடந்த காலங்களிலே அப்படிப்பட்ட சம்பவங்கள் உங்கள் வாழ்க்கையிலும் நடந்திருக்கலாம். சவுல் என்னும் ராஜா அமலேக்கியருக்கெதிராக யுத்தத்திற்கு செல்லும் போது, அங்குள்ள யாவையும் அழித்துப்போடும்படி கர்த்தரிடத்திலிருந்து கட்டளையை பெற்றுக் கொண்டான். இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்த கர்த்தர் ஒரு காரியத்தை அழித்துப் போடும்படி சொன்னால், அதற்கு தகுந்த காரணங்கள் இருக்கும். ஒருவேளை தகுந்த காரணங்கள் எங்கள் அறிவுக்கு தெரியாவிடினும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படிவதே நமக்கு நலமாக இருக்கும். ஆனால், சவுல் ராஜாவோ, யுத்தத்தில் வெற்றி பெற்று, ஆடுமாடுகளில் முதல்தரமானவைகளையும், இரண்டாந்தரமான வைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும், அழி த்துப்போட மனதில்லாமல், அவைகளை இச்சித்து, தீட்டானவைகளை கொள்ளைப் பொருளாக கொண்டு வந்தான். தீர்க்கதரிசியாகிய சாமு வேலை அவனிடம் வந்தபோது, நான் கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான். அதற்குச் சாமுவேல்: அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். அதற்கு சவுல்: ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்ப டிக்குத் தப்ப வைத்தார்கள். அவன் ராஜாவாக இருந்தும், தன் இச்சை யை நிறைவேற்றும்படி ஜனங்களை கர்த்தருடைய வார்த்தையின்படி நடப்பிக்க மனதில்லாமல், கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணிய பின்னரும், மனந்திரும்ப மனதில்லாமல், அதை"உம்முடைய" தேவனுக்கே கொண்டு வந்தேன் என்றான். இப்படியாக குற்றங் குறைகளை அறிக்கை செய்ய கிடைக்கும் சந்தர்பங்களிலே, சிலரோ, தங்கள் பாவங்களோடு பொய்யையும் மாய்மாலத்தையும் சேர்த்துக் கொள்கின்றார்கள். நீங்க ளோ அப்படியிராமல் தேவனுக்கு முன்பாக நல்ல அறிக்கை செய்யுங்கள்.

**1 சாமுவேல் 15:22**

**பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.**

**ஜெபம்**: மனதுருக்கும் தேவானாகிய கர்த்தாவே, நான் உம்முடைய வார்த்தையை விட்டு தவறிவிட்டேன் என்று உணரும் போது, உம் சமுகத்திலே உண்மையை பேசும் உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சந்தர்பங்களை தவறவிடாதிருங்கள்

ஆண்டவராகிய இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவனாகியயூதாஸ், தன்னுடைய ஆண்டவராகிய இயேசுவை காட்டிக் கொடுக்கும்படி திரளான ஜனங்களோடு வந்தபோது, அவன்: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். அப்பொழுது ஆண்டவராகிய இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார். ஆனாலும் அவன் அந்த சந்தர்ப்பத்திலும், கயவர்களோடு தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி, ஆண்டவராகிய இயேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தான். ஏறத்தாழ மூன்றரை வருடங்களாக ஆண்டவரரோடு உணவுண்டவன், மனந்திருப்புதலைக் குறித்து பிரசங்கம் செய்தவன்,மன்னிப்பைக் குறித்து நன்கு அறிந்திருந்தவன். ஆனாலும், அவன் ஆரம்பத்திலிருந்து தன் மனதை கடினப்படுத்துகின்றவனாவும், திருடனாவும் இருந்தான் (யோவான் 12:6). கிடைக்கும் அருமையான சந்தர்ப்பங்களை பயன்படுத்தாமல், முடிவிலே வழி தெரியாமல், தன் னையே தான் மாய்த்துக் கொண்டான். இன்று, தங்களை விசவாச மார்க்கத்தார் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு கூட்டம், ஒரு முறை மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக் கொண்டால் போதும், அதன்பின்பு, எப்படியும் வாழ்ந்து கொள்ளலாம் என்று மனந்திரும்புதலையும் பரிசுத்தமாகுத லையும் குறித்து, தவறாக உபதேசித்து வருகின்றார்கள். இவர்கள் தங் கள் ஸ்தாபனங்களின் வாசல்களை விசாலமாக்குவதால், அநேகர் அந்த வாசல் வழியாக இலகுவாக நுழைந்து, துணிகரமாக பாவங்களை செய் கின்றார்கள். நீங்களோ, அவ்வண்ணமாக கர்த்தரை அறியவில்லை. யூதாஸ் ஆண்டவர் இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கொண்டு, அவ ருக்க பின்பாக சென்றவன். ஆனால், அவன் மனமோ அவரோடு இசை ந்திருக்கவில்லை. எனவே நாம் பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே நாம் காத்துக் கொள்ள வேண்டும். நமுக்கு கிடைக்கும் முதலாவது சந்த ர்பத்திலே நல்ல அறிக்கை செய்து, மனந்திரும்பி, இயேசுவின் சாய லிலே வளர்ந்து பெருகவேண்டும். “துன்மார்க்கன் தன் வழியையும், அக் கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும் பக்கடவன் அவர் அவன்மேல் மனதுருகுவார் நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன் அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.” துன்மார்க்கனுக்கு அத்தனை சிலாக்கியமென் றால், தேவ பிள்ளைகளாகிய நமக்கு பிதாவானர் இரங்காதிருப்பாரோ? நிச்சயம் இரக்கம் செய்வார்.

**ஏசாயா 55:6**

**கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் உம்மோடு வாழும் வாழ்க்கையை மேன்மையாக கருதி, உம்முடைய வழியிலே நடக்கும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# “பிள்ளைகள்”

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதர்கள் யாவரும் தேவனுக்கு பயப் படாதவர்களும், துன்மார்க்கமான வழியை வாஞ்சித்து பின்பற்றுகின் றவர்களாகவும் தங்கள் கண்போன வழியிலே வாழ்ந்து வந்தார்கள். அந்தஊரிலே அநியாயங்களும், அழிவுகளும் ஒரு கொள்ளை நோயைப் போல பரவிக் கொண்டிருந்தது. அந்த வேளையிலே, அந்த ஊர் வழி யாக சென்ற ஐசுவரியவானொரு வன், தெருவோரமாக மரிக்கும் தறு வயில் கைவிடப்பட்டிருந்த ஒரு சிறு பையனை கண்டு, அவன் மேல் மனதுருகி, துரிதமாக பட்டணத்திலு ள்ள மருத்துவனைக்கு எடுத்துச் சென்று, அவன் உயிரை காப்பாற்றி, அந்த நாட்டின் சட்டத்தின்படி ஒழுங்கு முறைகளைபடி சட்டபூர்வ மாக அவனை தனது பிள்ளையாக்கி கொண்டான். பிள்ளையாண்டா னும், ஐசுவரியவானின் வீட்டிலே, ஒரு செல்லப் பிள்ளையைப் போல சுதந்திரமாக வளர்ந்து வந்தான். பல ஆண்டுகள் சென்று வாலிப பிரா யத்தை அடைந்த பின்னர், அவன் தவறான பழக்கவழக்கங்களு ள்ள சிலரை தன் நண்பர்க ளாக்கிக் கொண்டு, அவர்களோடு தன் காலத்தை வீணடித்து வந்தான். அவன் தந்தையாகிய அந்த ஐசுவரியவான், அநேக புத்திமதிகளையும், ஆலோசனைகளையும் கூறி, அவனை கடிந்து கொண்ட போதும், அவன் கீழ்படிவற்றனாக, தான் பிறந்த இடத்திலுள்ள ஜனங்களைப் போல, துன்மார்க்கத்தை வாஞ்சித்து அதைப் பின்பற்றி வந்தான். அவனுடைய தந்தையார், அவனை துன்னமார்க்த்திலிருந்து காப்பாற்ற பல சந்தர்பங்களை கொடுத்து வந்த போதும், அவன் அதை அசட்டை செய்து வாழ்ந்து வந்தான். பிரியமான சகோதர சகோதரி களே, அந்த வாலிபனானவன், சிறு வயதிலே, அழிவுக்குரிய பிள்ளை யாக இருந்தான். அவ்வழியாய் சென்ற இரக்க மனம்படைத்த அந்த ஐசுவரியவானால், அவன் அவருடைய சொந்தப் பிள்ளையாக மாற்றப் படான். வாலிப பிரயாயத்தை அடைந்த போது, உலகத்தின் ஆசை இச் சைகளுக்கு தன்னை ஒப்புக் கொடுத்து, அவன் கீழ்படியாத பிள்ளயாகி விட்டான். நாம் யாவரும் கோபக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம், கிறிஸ்து இயேசு வழியாக தேவ பிள்ளைகளாக்கப்பட்டோம், மறும் படியும் நாம் நம்மை மாம்சத்தின் கிரியைகளுக்கு மனதார நம்மை ஒப் புக் கொத்தால், நாம் கீழ்படியாமையின் பிள்ளைகளாகிவிடுவோம். நாமோ அப்படியாக மாறிவிடாமல் எப்போதும், உணர்வுள்ள தேவ பிள்ளைகளாக உணர்வுள்ள வாழ்க்கை வாழ்வோமாக.

**எபேசியர் 2:1**

**அக்கிரமங்களினாலும் பாவ ங்களினாலும் மரித்தவர்க ளாயிருந்த உங்களை உயி ர்ப்பித்தார்.**

**ஜெபம்:** மேலானவைகளை தேடும்படிக்கு என்னை அழைத்த தேவனே, நான் எப்போதும் உம்முடைய வார்த்தையின்படி கீழ்படிவுள்ள, மனந்திரு ம்புகின்ற, உணர்வுள்ள உம்முடைய பிள்ளையாக வாழ என்னை வழிந டத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# "அசட்டை செய்கின்றவர்கள்"

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாக இருந்தால், அந்த ஊரிலுள்ளவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குள்ளானார்கள். கர்த்தருடைய தூதர்கள் நீதிமானாகிய லோத்து என்னும் மனிதனை நோக்கி: இவ்விடத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத் தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துக்கொண்டு போ. நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகி றோம் இவர்கள்கூக்குரல் கர்த்தரு டைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது. இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள். அப்பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே பேசி: நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள் கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்றான் அவனுடைய மருமக்கள்மாரின் பார்வைக்கு அவன் பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது. அதனால் அவர்கள் தேவ எச்சரிப்பை அசட்டை பண்ணி, லோத்துவோடுகூட போகாமல், கோபாக்கினைக்கு என்று நியமிக்கப்பட்ட அந்த ஊரிலேயே இருந்து விட்டார்கள். தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கும்படி அழைப்பை பெற்ற சகோதர சகோதரிகளே, அன்று மட்டுமல்ல, இன்றும், தேவனுடைய வார்த்தைகளை அசட்டை பண்ணம் பரியாசக்காரர்கள் நம் மத்தியிலே இருக்கின்றார்கள். அவர்கள் தேவனுடைய நீதிமான்களுக்கு சமீபமாக இருக்கின்றவர்களாகவும், இரட்சிப்பின் நற்செய்தி அறிந்தவர்களாகவும், வேறு பிரிக்கப்பட்ட வாழ்வை தினமும் கண்களாலே கண்டு கொண்டாலும், இருதயத்தில் உணர்வடையாமல், மகத்துவங்களை தூஷிக்கின்றவர்களாகவும், வாசல் படியிலே வந்திருக்கும் தேவ கோபாக்கினையின் எச்சரிப்பு தொனியை அசட்டை செய்து, இரட்சிப்பை துணிகரமாக தள்ளி போடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆபிரகாம், கர்த்தரிடத்திலே அந்த ஊர்களுக்காக பரிந்துர்பேசியது போல, நாமும் இப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களுக்காக வேண்டுதல் செய்ய வேண்டும். அதே வேளையிலே, தேவனுடைய நியாயத்தீர்பை குறித்து நாம் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**2 பேதுரு 2:9**

**கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, நான் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாமலும், துன்மார்கரோடு இசைந்து கொள்ளாமலும், வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கையை குறித்து உணர்வுள்ளனாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிதாவானர் பாராட்டிய அன்பு

ஒரு தேசத்தின் குறிப்பிட்ட பகுதியிலே, ஏதோ காரணத்தினால், குற்ற வாளிகள் என்று தீர்க்கப்பட்ட ஒரு ஜனக்கூட்டம் வாழ்ந்து வந்தார்கள். குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்ட மனிதர்கனோடு மட்டுமல்ல, அவர்கள் மனைவி, பிள்ளைகள், சந்தியாரோடும், அந்த தேசத்திலுள்ள எவரும் உறவு கொண்டாடவே, நட்பாக இருக்கவோ விரும்பியதில்லை. இப்ப டியாக அவர்களுக்கு ஆதராவாக எந்தஏழையோ, பணக்காரனோ, இல் லாதிருந்த சமயத்திலே, அதை அறி ந்து கொண்ட அந்த தேசத்தின் ராஜா வானவன், அந்த இடத்திற்கு சென்று, அவர்களோடு பேசி, அவர் கள் குற் றங்கள் யாவையும் மன்னித்து, அவர் களை நோக்கி: நீங்கள் என்னுடைய சொந்த ஜனங்கள் என்று அவர்க ளோடு உறவு பாராட்டி னான். அந்த உறவு பாராட்டுதலுக்கு அந்த ஜனங் கள் பாத்திரராக இல்லாதிருந்த போதும், அவர்களை தன்னுடைய சொந்த ஜனங்கள் என்று பகிரங்கமாக அறிக்கையிடுவதற்கு அந்த ராஜாவானாவன் வெட்கப்படவில்லை. பல ஆண்டு காலமாக, சந்ததி சந்ததியாக ஒடுகக்பபட்ட அந்த ஜனங்கள் ராஜாவினுடைய இரக்த்தை குறித்து ஆச்சரியப்ப ட்டார்கள். இவ்வண்ணமாகவே, எல்லோரும் நித்திய கோபாக்கினைக்கு பாத்திரராக இருந்த போது, பிதாவாகிய தேவன்தாமே, நாம் அழிந்து போகதபடிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்காக அனுப்பினார். அவர் இந்த உலக த்திலே வாழ்ந்த நாட்களிலே, ஏழைகள், எளியவர்கள், பாவிகள், துரோ கிகள், நோயாளிகள் என்று சமுதாயத்தினாலே தள்ளிவிடப்பட்டு, இனி வாழ்வு இல்லை என்ற நிலைமையிலுள்ளவர்களின் பாவங்களை மன்னி த்து, இனி பாவம் செய்யாதே என்று கூறி, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுத்தார்.அவர்களைதம்முடைய சொந்த ஜனங்களாக ஏற்றுக் கொண் டார். இனி வாழ்வு இல்லை என்று நம்பிக்கை இழந்து போயிருந்த அவ ர்களுடைய வாழ்க்கையிலே அவர் நம்பிக்கையாக வந்தார். அந் நாட் களிலே மாத்திரம் அல்ல, அன்றும், இன்றும், என்றும் அவர் மாறா தவ ராகவே இருக்கின்றார். தம்மிடத்திலே வரும் எவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லை. பிதாவாகிய தேவன்தாமே தம்முடைய சொந்தக் குமா ரனாகிய இயேசு வழியாக நமக்கு மீட்பை தந்தது மட்டுமல்ல, அவர் நம்மை தம்மடைய சொந்தக் குமார்கள் குமாரத்திகள் என்று அழைக்க ஒருபோதும் வெட்கப்படதில்லை. எந்த தகுதியுமற்ற நம்மிடத்தில் அவர் பாராட்டிய அன்பு எவ்வளவு பெரியதென்று பாருங்கள்.

**1 யோவான் 3:1**

**நாம் தேவனுடைய பிள் ளைகளென்று அழைக்கப்ப டுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.**

**ஜெபம்:** அப்பா பிதாவே என்று உம்மை அழைக்க, புத்திர சுவிகாரத்தின் ஆவியை எனக்கு தந்த தேவனே, நீர் கொடுத்த இந்த பெரிதான சிலாக்கிய த்திற்காக நன்றி. நான் எப்போதும் உம்மை பற்றிக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய்| செப்டெம்பர் 26 | 📖 மாலை வாசகம் – எபேசியர் 5:8

# கீழ்படியாமையின் பிள்ளைகள் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த சில மனிதர்கள், தங்களுக்கு உண்டான பெலத்தையும், தாலந்துகளையும், துஷ்பிரயோகம் செய்து, ஊர் மக்களிடம் சென்று கப்பம் வேண்டுவதிலும், சிலரை கொள்ளையடிப்பதிலும் தங்கள் வாழ்நாட்களை செலவழித்து, வீணர்களாக சுற்றி திரிந்தார்கள். ஒரு நாள் அந்த ஊரின் அதிபதியின் சேவகர்கள் அவர்கள் யாவரையும் பிடித்து, கட்டி, ஊரின் அதிபதியிடம் தீர்ப்புக்காக கொண்டு வந்தார்கள். அவர் இளவயதுடையவர்கள் என்று கண்ட அதிபதி, அவர்கள் மேல் மன துருகி, இனி நீங்கள் கொள்ளை யடித்து வாழத் தேவையில்லை. நான் உங்களை வேலைக்கு அமர்த்துகின் றேன். அதற்குரிய ஊதியத்தை நான் உங்களுக்கு கொடுப்பேன். என் சேவ கர்களோடு சேர்ந்து, சேவர்களாக நீதியை நடப்பிக்க உழையுங்கள். நல மானதை கற்றுக் கொள்ளுங்கள். ஊரையும், ஊர் மக்களின் நலமான வாழ்க்கைகாக உங்கள் பெலத்தையும், தலாந்துகளையும், நேரத்தையும் முதலீடு செய்யுங்கள் என்று, அவர்களுக்கு வேண்டிய புதிய உடைகள், குதிரைகள், பயிற்சிகள், சலுகைகள் யாவற்யையும் கொடுத்து அவர்களை தன்னிடமாய் சேர்த்துக் கொண்டான். ஒரு சில ஆண்டுகள் அந்த மனி தர்கள் இராபக்தியோடு வேலை செய்தார்கள், ஆண்டுகள் கடந்து சென்ற போது, அவர்கள் மறுபடியும், தங்கள் பழைய வாழ்க்கைக்கு இட்டுச் சென்ற வழிகளை பின்பற்றினார்கள். தங்கள் இச்சைகளுக்கு இடங்கொ டுக்க ஆரம்பித்தார்கள். அதிபதியின் பாதுகாப்பிற்குள்ளும், இரக்கத்தி ற்குள்ளும் இருந்து கொண்டு, துஷ்டர்களாக மறுபடியும் வாழ்ந்து வந் ததை கண்டு அதிபதி, அவர்கள் மேல் மிகவும் கோபம் கொண்டு, அவர் களை தண்டித்து, சிறையிலே போடு வித்தான். மேலானவைகளை நாடு ம்படி பிரித்தேடுக்கப்பட்ட பிரியமானவர்களே, பூமியிலுள்ளவைகளை யல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித் தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கி றது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசா ரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராத னையான பொரு ளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவ யவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படி யாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்.

**கொலோசெயர் 3:10**

**தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே**

**ஜெபம்**: என்மீது அன்புகூர்ந்து என்னை உம்முடைய பிள்ளையாக்க சித் தம் கொண்ட தேவனே, நான் உம்முடைய அழைப்பைக் குறித்து அசதி யாக இல்லாமல், உணர்வுள்ள வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதியுள்ளவர்களாயிருங்கள்

ஒரு ஊரிலே, பராக்கிரமமும், ஐசுவரியமுமுள்ள அதிகாரியொருவன் இருந்தான். அவன் தன் அகதிாரத்தையும் துஷ்பிரயோகம் செய்யாதவனும், நீதியிலே நிலை நிலைநிற்பவனுமாக இருந்தால், மற்றய அதிகாரிகள், ஜனங்கள் மத்தியிலே கனமும் நன்மதிப்பு பெற்றவனுமாக இருந்தான். இத்தனை செல்வாக்குகள் உள்ள அந்த அதிகாரியின் இரக்கமுள்ள மனதை கண்டு பலரும் ஆச் சரியப்பட்டார்கள். ஒருநாள், வாலிப னொருவன் வெகு வேகமாக ஓடிச் சென்று, அந்த ஐசுவரியவானின் காலடியிலே விழுந்து.ஐயா, என்னை காப்பாற்றுங்கள் என்று கெஞ்சிக் கேட்டான். அதற்கு அந்த அதிகாரியானவன்: நான் உன்னை காப்பாற்றுவதற்கு உனக்கு நேர்ந்த ஆபத்து என்ன என்றார். வாலிபனானவன் அவரை நோக்கி: குடும்ப கஷ்டத்தினால் கடையொன்றிலே களவு செய்யும் போது, அகப்பட்டுவிட்டேன். என்னை அடிக்கும்படிக்கு அநேகர் காத்திருக்கின்றார்கள் என்றான். அதற்கு அவர்: நீ செய்தது குற்றம் என் பதை உணர்கின்றாயா என்று கேட்டார். அதற்கு அவன்: ஆம், ஐயா, எப்படியாவது என்னை காப்பாற்றுங்கள் என்றான். அதற்கு அவர்: நீ என்னோடு வா, உன்னை ஒருவரும் அடிக்க மாட்டார்கள். நீ களவு எடுத்த தொகையை நான் திரும்ப செலுத்துகின்றேன். உன்னை அடிக்கும்படி வருகின்றவர்கள் முன்னிலையிலே மன்னிப்பை கேட்டு, நான் அப்படி இனி செய்யமாட்டேன் என்று அவர்களிடம் மனதார அறிக்கை செய். எல்லாம் சரியாகிவிடும் என்றார். அதற்கு அவன், அப்படியெல்லாம் மன்னிப்பு கேட்க முடியாதையயா. நீங்கள் மிகவும் இரக்கமுள்ளவர் எனவே உங்கள் அதிகாரத்தை பாவித்து, இந்த வழக்கை எப்படியாவது தள்ளுபடி செய்துவிடுங்கள் என்றான். அதற்கு அவர்: மகனே, நீ உன் சிந்தையை மாற்றிக் கொள்ள வேண்டும். நான் உனக்கு இரக்கம் காட்ட ஆயத்தமாகவே இருக்கின்றேன். அதற்காக நான் அநீதி செய்ய மாட்டேன். உன் அநியாயத்தை மூடி மறைக்க இன்னும் அதிகமாக அநீதி செய்யாதே என்றார். பிரியமான வர்களே, நம்முடைய தேவனாகிய கர்த்தரைப் போல் நம்மை அன்பு செய்ய ஒருவருமில்லை அதே வேளையிலே அவருடைய நீதியிலும், பரிசுத்ததிலும் அவருக்கு நிகரானவர்கள் எவருமில்லை. எனவே தேவன் இரக்கம் செய்வார் என்று கூறி, அநியாயங்களிலே நிலைத்திருக்காதிருங்கள். “நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” *(1 யோவான் 1:9)*

**சங்கீதம் 97:2**

**நீதியும்நியாயமும்அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்.**

**ஜெபம்**: நீதியும் நியாயமுமுள்ள தேவனே, நான் ஒருபோதும் அநியாயம் செய்வதில் நிலைத்திருக்காமல், வேதனை உண்டாக்கும் வழிகளை விட்டு, உமக்கு பிரியமான வழியிலே என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரியமான பிள்ளைகள்

**எபேசியர் 5:1**

**ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி,**

நாம் ஆராதிக்கும் தேவன் அன்புள்ளவர். அவர் கிருபை என்றுமுள்ளது. ஆதலால், மனிதகுலம் பாவத்திலே மாண்டு அழிந்து போகாமல், விடுதலையடையும்படிக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகிற்கு தந்தார். இழந்து போன திவ்விய சுபாவத்தை நாம் பெற்றுக் கொள்ளும் வழியை உண்டு பண்ணி, அவரோடு நாம் என்றென்றும் வாழும்படிக்குசித்தமுள்ளவராக இருக்கின்றார். அவருடைய திவ்விய சுபாவங்களிலே மாறுதல் ஏதுமில்லை இல்லை. அவர் அன்புள்ளவராக இருப்பது போல நாமும் அன்புள்ளவர்களாக இருக்கும்படி விரும்புகின்றார். அவர் கிருபை நிறைந்தவராக இருப்பது போல நாமும் கிருபை நிறைந்தவர்களாக வாழும்படிக்கு விரும்புகின்றார். அதுமட்டு மல்ல, அவர் பரிசுத்தமும் நீதியும் உள்ளவராக இருப்பது போல, நாமும் பரிசுத்தமும் நீதியுள்ளவர்களுமாக இருக்கும்படிக்கு அவர் விரும்புகின்றார். ஆனால், இன்று சில விசுவாசிகள் கூட, "நாங்கள் மறுபடி பிறந்தவர்கள், இரட்சிப்படைந்தவர்கள், எப்படியும் பரலோகம் சென்று விடுவோம்" என்று பரிசுத்த அலங்காரத்தை தள்ளிவிட்டு, இந்த உலகத்தின் தத்துவங்களை தேவனுடைய போதனையாக்கிக் கொண்டு, அவருடைய பரிசுத்தத்தையும், நீதியையும் அசட்டை செய்யகின்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். நாம் அவருக்கு பிரியமுள்ள பிள்ளைளாக வாழும்படிக்கு நம்மை வேறு பிரித்தார். ஒரு நல்ல தகப்பன் தன்னுடைய பிள்ளைகள் தன்மைப் போல நல்ல சுபாவமுடையவர்களாக இருக்கும்படிக்கு விரும்புவதுபோலவே, நம்முடைய பரம பிதாவும், அவருக்கு பிரியமுள்ள பிள்ளைகளாக நாம் திவ்விய சுபாமுடையவர்களாக வாழும்படிக்கே விரும்புகின்றார். "கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்." "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள். அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே." ஏன்று பரிசுத்த வேதாகத்திலே வாசிக்கின்றோம். எனவே, இந்த உலகத்தால் கலப்படமான போதனைகளை பின்பற்றாமல், சத்தியதின் வழியிலே நடத்து, இடுக்கமான வாசல் வழிலே நுழையுங்கள்.

**ஜெபம்:** அன்பின் என்னை பரிசுத்தனாக்க சித்தம் கொண்ட தேவனே, நான் மறுபடியும் தர்க்கம் பண்ணுகின்றவனாவும், மன கடினமுள்ளவனாகவும் மாறிவிடாதபடிக்கு, என் மனக் கண்களை பிரகாசிப்பிக்கச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரிசுத்தவான்களுக்கு தகாதவைகள்

"சிறுவர்கள் வாலிபர்கள் எச்சரிக்கையாயிருங்கள், தன் போலியான இனிய வார்த்தைகளால் வஞ்சிக்கும் மனிதனொருவன் எங்கள் மத்தியிலே இருக்கின்றான்." என்று ஒரு பட்டணத்திலே செய்தி வாயிலாக ஜனங்களுக்கு எச்சரிப்பு வழங்கப்பட்டது. ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் விலை மதிக்க முடியாத இரத்தினாலே மீட்கப்பட்ட பரிசுத்தவான்களே, நம் மத்தியிலும் அப்படிப்பட்ட வஞ்சகனொருவன் சுற்றித்திருக்கின்றார்என்று பரித்த வேதாகமம் நமக்கு எச்சரிப்பை வழக்கியிருக்கின்றது. "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே." "அவன் ஆதிமுதற்கொண்டு மனு'கொலைபாதகனாயிருக்கிறான் சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." ஏன்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கின்றார். அன்று தேவ மகிமையை தரித்திருந்த ஆதாம் ஏவாளை வஞ்சித்தவன், இன்று சும்மா இருப்பானோ? "கெர்ச்சிக்கின்ற சிங்கம் போல, யாரை விழுங்கலாம் என்று சுற்றித்திருக்கின்றான்." எனவே, நீங்கள் அறிந்திருக்கின்ற இனி பாவம் செய்யாதே என்ற சத்தியத்தை விட்டு, பாவம் செய்யதாலும் பரவாயில்லை என்று இனிய வார்த்தைகளை போதிக்கின்றவர்களை விட்டு விலகி ஓடுங்கள். "மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள் ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்." என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, கிருபையின் காலத்திலே வாழும் நீங்கள், தேவ கிருபையை உதாசினப்படுத்தாதபடிக்கு, காலத்தை பிரயோஜனப்படுதிக் கொள்ளுங்கள். வீண் போதனைகளை பின்பற்றி பின்வாங்கிப் போகாமல், சத்தியதிலே நிலைத்திருங்கள்.

**எபேசியர் 5:6**

**ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;**

**ஜெபம்**: பரிசுத்தமுள்ள பிதாவே, மாயமான போதனைகளுக்கு இடங்கொடுத்து பின்வாங்கி போகாமல், பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு காத்துக் கொள்ள பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வெளிச்சத்தின் பிள்ளைகள்

ஒரு மனிதனானவன், வியாபார அலுவலாக, மாலை நேரங்களிலே பக்கத்து கிராமத்திலுள்ள கிராமத்திற்கு சென்று வருவது வழக்க மாயிருந்தது. அவனுடைய வயதான தந்தையார், அவனை நோக்கி: மகனே, மாலையிலே சென்று, இரவிலே வீடு திரும்புகின்றாய். இது மழை காலமாக இருக்கின்றது, கார்மேகங்கள் சூழ்ந்தால், காரிருளிலே பயணம் செய்ய முடியாது. எனவே, இந்த விளக்கை நீ எடுத்துக் கொண்டு செல்லு என்று ஆலோசனை கூறினார். அதற்கு அந்த மனிதனானவன்: அப்பா, என் கண்பார்வை நன்றாகவே இரு க்கின்றது, எனவே எனக்கு வெளிச்சம் தேவையில்லை. உங்கள் கண்பார்வை மங்கியிருப்பதால், உங்களுக்குத்தான் வெளிச்சம் இல்லாமல் நடக்க முடி யாது என்று கூறிவிட்டு தன் வழியே போய்விட்டான். ஒரு நாள் இரவு நேரம் அவன் வீடு திரும்பும் போது, கார்மேகங்கள் சூழ்ந்து கொண்டது. ஒரு அடி எடுத்து வைக்க முடியாதபடிக்கு, எங்கும் காரிருளாக இருந் தது. வன விலங்குகளுடைய சத்ததும், சீறும் சர்பங்களின் சத்தமும் அவன் காதிலே ஒலித்தது தவிர, அவன் அவைகளை தன் கண்களி னால் காண முடியாமல், திகில் அடைந்தான். ஜீவ ஒளியாகிய ஆண்ட வர் இயேசுவினால் வெளிச்சத்தின் பிள்ளைகளாக்கப்பட்ட வர்களே, நாம் எப்போதும், எவ்வேளையும், எந்தப் பருவத்திலும், திவ் விய ஜீவ ஒளியிலே நடக்கின்றவர்களாக காணப்படவேண்டும். "முற்கா லத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக் கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துெ காள்ளுங்கள்." "நீங்கள்ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமு ள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள் ளுங்கள். ஆகை யால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்." ஒரு காலத்திலே ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டவன், எனவே நான் எப்படியும் வாழ்ந்து கொள்வேன் என்று மறுபடியும் அந்தகார கிரியைகளுக்கு உடன்படுகின்றவர்கள், வேத வார்த்தைகளை தங்களுக்கேற்றபடி புரட்டுகின்றார்கள். தேவனிடத்திலே மன்னிப்பு உண்டு, ஆதாலால், நான் எப்படியும் நடந்து கொள்ளலாம் என்று போதிக்கின்றவர்களை விட்டு விலகி, விழிப்புள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

**எபேசியர் 5:8**

**இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.**

**ஜெபம்:** ஜீவ ஒளிளை என்னுள் பிரகாசிப்த்த தேவனே, மற்றவர்கள் தூங்குகிறதுபோல நானும் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்த பத்தியுடையவனாக, வெளிச்சத்திலே நடக்க என் மனக் கண்களை பிரகாசிப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.